In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| OS.No.212/2018 | Deposition of Witness: DW.5 |
| Name: Anand Sankar Ganesh | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 05.03.2026.

முதல் விசாரணை :

எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். நான் ஆததூர் தாலுகாவில் வட்டார வளர்ச்சி அலுவலகராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். ஜான் பன்னீர் செல்வம் (வாதி) என்பவர் எங்கள் அலுவலகத்திற்கு 24.07.2023ம் தேதி வீட்டு வரி பெயர்மாற்றம் செய்யக்கோரி ஒரு விண்ணப்பம் கொடுத்தார். அந்த விண்ணப்பத்துடன் அவரது அப்பா கொடுத்த உயில்சாசனத்தை இணைத்துக்கொடுத்தார். அந்த உயில் சாசனம் 20.07.2016ம் தேதி எழுதப்பட்டுள்ளதாக கண்டுள்ளது. அந்த உயில் சாசனத்தின் அடிப்படையில்தான் ஜான் பன்னீர்செல்வத்தின் வீட்டுவரி பெயர்மாற்றம் மீது நடவடிக்கை மேற்கொண்டோம் என்றால் சரிதான். அதன்படி அவர் பெயருக்கு வீட்டுவரி பெயர்மாற்றம் செய்து கொடுத்துள்ளோம். அவ்வாறு வீட்டுவரி பெயர்மாற்றம் செய்ததற்கான சொத்து வரி ரசீதையும் கொண்டுவந்துள்ளேன். ஜான் பன்னீர் செல்வம் 24.07.2023ம் தேதி பஞ்சம்பட்டி ஊராட்சிமன்ற தலைவரிடம் கொடுத்த மனு அசலுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்ட நகல் பிவாசாஆ.21. 20.07.2016ம் தேதியிட்ட உயில்சாசனம் சான்றிட்ட நகலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட அதன் நகல் பிவாசாஆ.22. ஜான் பன்னீர் செல்வம் பெயரில் 25.07.2023 மற்றும் 30.06.2025ம் தேதியன்று ஏற்பட்டுள்ள சொத்து வரிரசீதுகள் இரண்டு பிவாசாஆ.23 வரிசை.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–1ம் பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை – வழக்குரைஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.05 16:04:17 +0530

Principal District Judge,
Dindigul.